வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : வான்மதி

தேதி 13.04.2025 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

புத்தாண்டு பிறப்பை முன்னிட்டு இந்தியாவிலும்,வெளிநாடுகளிலும் வாழும் அனைத்து இந்தியர்களுக்கும் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

டாக்டர் பி.ஆர் அம்பேத்கர் பிறந்த தினத்தை முன்னிட்டு பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை ஹரியானாவில் பல்வேறு வளர்ச்சி திட்டங்களை தொடங்கி வைக்க உள்ளார்.

ஜாலியன் வாலாபாக்கில் உயிரிழந்த தியாகிகளின் நினைவு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

நாடு முழுவதும் நெடுஞ்சாலைகளை வலுப்படுத்த அடுத்த 2 ஆண்டுகளில் 10 லட்சம் கோடி ரூபாய் முதலீடு செய்ய அரசு திட்டமிட்டுள்ளதாக மத்திய நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

*முர்மு* (9)

தமிழ் புத்தாண்டு, வைசாகி, விஷீ, பஹாக் பிஹீ, பொய்லா போயிஷாக், மேஷாதி உள்ளிட்ட புத்தாண்டு பிறப்பை முன்னிட்டு இந்தியாவிலும்,வெளிநாடுகளிலும் வாழும் அனைத்து இந்தியர்களுக்கும் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் அறுவடை நேரத்தில் கொண்டாடப்படும் இந்த பண்டிகைகள் நமது சமூக மரபுகளையும், வேற்றுமையில் ஒற்றுமையையும் குறிப்பதாக அவர் தெரிவித்துள்ளார். இந்த பண்டிகைகள் மூலம் நமது அண்ணதாதா விவசாயிகளின் கடின உழைப்பை மதித்து, அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

*புத்தாண்டு வாழ்த்து* (18)

தமிழ் புத்தாண்டு மற்றும் விஷீ மற்றும் மலையாள புத்தாண்டை முன்னிட்டு புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன்,முதலமைச்சர் திரு ரங்கசாமி, உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம் மற்றும் அமைச்சர்கள் உள்ளிட்டோர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். துணை நிலை ஆளுநர் கைலாஷ்நாதன் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், நம்முடைய பண்பாட்டையும், பாரம்பரியத்தையும் எடுத்துக் காட்டும் இந்த புத்தாண்டு

கொண்டாட்டங்கள் அனைவரது வாழ்விலும் செழிப்பையும், மகிழ்ச்சியையும் கொண்டு வரட்டும் என்று அவர் தமது வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார். முதலமைச்சர் திரு ரங்கசாமி விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், தமிழர்கள் கொண்டாடும் ஒவ்வொரு பண்டிகையும் அவர்களது பண்பாட்டு உணர்வுகளையும், வளமான கலாச்சார கூறுகளையும் பிரதிபலிப்பதாக தெரிவித்துள்ளார். தமிழர்களின் பண்டிகைகள் மற்றும் விழாக்கள் மரபுசார்ந்த பழக்க வழக்கங்களை கொண்டிருப்பது மட்டும் அல்லாமல், பல்வேறு கலாச்சார பின்னணிகளை கொண்ட சமூகங்களை நோக்கமாக கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இந்த புத்தாண்டு அனைவரது வாழ்விலும், ஏற்றமிகு வளர்ச்சியையும், குறைவில்லா வளத்தையும், நிறைவான மகிழ்ச்சியையும் கொண்டு சேர்ப்பதாக அமையட்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மோடி (11)

அம்பேத்கர் பிறந்த தினத்தை முன்னிட்டு பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை ஹரியானா மாநிலத்திற்கு செல்ல உள்ளார். நிகழ்ச்சியில் ஹிசாரில் இருந்து அயோத்திக்கு முதல் வணிக விமான சேவையை, அவர் கொடியசைத்து தொடங்கி வைத்து உரையாற்றுகிறார். தொடர்ந்து, ஹிசார் விமான நிலையத்தின் புதிய முனைய கட்டிடத்திற்கும் அவர் அடிக்கல் நாட்டுகிறார். தீனபந்து சோட்டுராம் அனல் மின் நிலையத்தின் 800

மெகாவாட் நவீன அனல் மின் நிலையத்திற்கும் பிரதமர் அடிக்கல் நாட்ட உள்ளார். சுமார் 8 ஆயிரத்து 470 கோடி மதிப்புள்ள, 233 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த முனையம் ஹரியானாவின் எரிசக்தி தன்னிறைவை கணிசமாக அதிகரிக்கும். இந்த முனையம் ஆண்டுக்கு 2 ஆயிரத்து 600 மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்டதாக இருக்கும்.

அம்பேத்கர் (7)

டாக்டர் பிஆர் அம்பேத்கரின் 135 ஆவது பிறந்த தின விழா நாளை புதுடெல்லியில் நாடாளுமன்ற வளாகத்தில் கொண்டாடப்படுகிறது. இதனை ஒட்டி நாடாளுமன்ற வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சியில் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர், மக்களவை தலைவர் திரு ஓம்பிர்லா மற்றும் மத்திய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் பாபா சாகேப் அம்பேத்கருக்கு மலரஞ்சலி செலுத்த உள்ளனர்.

வேவ்ஸ் 1 (12)

உலக ஒலி-ஒளி பொழுதுபோக்கு மாநாட்டின் ஒரு பகுதியாக ஐதராபாத்தில் அனிமேஷன் கார்ட்டுன் குறித்த போட்டிகள் நடைபெற்றன. தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம், இந்திய இசைத் துறையுடன்

இணைந்து இந்த போட்டிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 10 பங்கேற்பாளர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இவர்களில் ஸ்ரீகாந்த் வெமுலா, மயங்க் ஹரிஷ் விதானி, ஆதித்யா தில்பாகி, மார்க் ரியான் சைம்லி, உள்ளிட்டோர் அடங்குவர். ஐதராபாத்தில் நடைபெற்ற போட்டி குறித்து தெலங்கான திறன் மற்றும் அறிவுசார் குழு தலைவர் திரு ஸ்ரீகாந்த வெமுலா கூறுகையில்... அனிமேஷன் துறையில் சிறந்த வேலை வாய்ப்புகள் உருவாகி வருவதாக குறிப்பிட்டார். இதுபோன்ற நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து ஐதராபாத் மீண்டும் ஒரு படைப்பு சக்தி என்பதை நிருபித்துள்ளதாக அவர் கூறினார்.

வேவ்ஸ் 2 (3)

முன்னதாக, மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் நேற்று 32 வேவ்ஸ் கிரியேட் இன் இந்தியா சவால் தொடர்களில் ஒன்றான தீம் இசை போட்டியின் வெற்றியாளர்களை அறிவித்துள்ளது. இது தொடர்பான ஒரு செய்தி....

(வாய்ஸ் )

வேவ்ஸ் வாய்ஸ்(14)

வேவ்ஸ் உச்சி மாநாடு வரும் மே மாதம் 1 ஆம் தேதி முதல் 4 ஆம் தேதி வரை மும்பையில் நடைபெற உள்ளது. இந்தியாவின் பன்முகத் தன்மை கொண்ட இசை திறமைகளை வெளியே கொண்டு வர வடிவமைக்கப்பட்ட இந்த போட்டிக்கு நாடு முழுவதிலும் இருந்து நூற்றுக்கணக்கானோர் விண்ணப்பித்தனர். அதனை புகழ் பெற்ற நடுவர் குழு மதிப்பீடு செய்து 6 வெற்றியாளர்களை தேர்ந்தெடுத்தது. இந்த போட்டியில் மேற்கு வங்கம் கொல்கத்தாவை சேர்ந்த திரு குணால்குண்டு, மற்றும் திரு அல்லப் சர்தார் ஆகியோர் வெற்றி பெற்றனர். மகராஷ்டிராவை சேர்ந்த இருவர் மற்றும் தமிழகத்தை சேர்ந்த மூவர் உட்பட 5 பேர் இரண்டாம் இடம் பிடித்தனர். இந்த போட்டிக்கான நடுவர் குழுவில் இந்திய இசைத் துறையை சேர்ந்த புகழ் பெற்ற இந்துஸ்தானி பாரம்பரிய பாடகர் திரு கோமேஷ் குமார் மாத்தூர், பின்னனி பாடகரும், கோலிவுட் நடிகருமான திரு சாந்திப் பக்சு, பாலிவுட் இசையமைப்பாளரும், இசை தயாரிப்பாளருமான திரு புல்ராஜ் சிங் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

*ஜாலியன் வாலாபாக்*(10)

ஜாலியன் வாலாபாக்கில் உயிரிழந்த தியாகிகளின் நினைவு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது. இதனை ஒட்டி, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் ஜாலியன்

வாலாபாக்கில் இன்று உயிர் நீத்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தினர். 1919 ஆம் ஆண்டு இந்த நாளில் சுதந்திர போராட்ட வீரர்களின் தியாகத்தை நினைவு கூர்ந்த குடியரசு தலைவர், அவர்களது தியாகம் நாட்டின் சுதந்திர போராட்டத்தினை வலுப்படுத்தியதாக கூறினார்.

நிகழ்ச்சியில் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்திய பிரதமர் திரு நரேந்திர மோடி, வருங்கால தலைமுறையினர், தியாகிகளின் உறுதியான உணர்வை எப்போதும் நினைவில் கொள்வார்கள் என தமது எக்ஸ் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

*நிதின் கட்கரி* (14)

அடுத்த 2 ஆண்டுகளில் நாட்டின் உட்கட்டமைப்பை மேம்படுத்தி, உலகின் சிறந்த சாலைகளுடன் ஒப்பிடும் வகையில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி தெரிவித்துள்ளார். வடகிழக்கு மற்றும் எல்லைப் பகுதிகளில் சிறப்பு கவனம் செலுத்தி நாடு முழுவதும் நெடுஞ்சாலைகளை வலுப்படுத்த அடுத்த 2 ஆண்டுகளில் 10 லட்சம் கோடி ரூபாய் முதலீடு செய்ய அரசு திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். வடகிழக்கின் கடினமான நிலப்பரப்பு மற்றும் பல

நாடுகளுடனான எல்லைகளுக்கு அருகாமையில் இருப்பதால், சாலை உட்கட்டமைப்பை மேம்படுத்துவது அவசர தேவை என்றும் அவர் குறிப்பிட்டார். வடகிழக்கு மாநிலங்களில் 784 நெடுஞ்சாலை திட்டங்கள் மூலம் 3 லட்சத்து 70 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் மதிப்பிடப்பட்ட செலவில், 21 ஆயிரத்து 300 கிலோ மீட்டருக்கும் அதிகமான சாலை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

*ஜிதேந்திர சிங்* (13)

அனைவருக்கும் கிடைக்கும் வகையிலான மருத்துவ வசதியை ஏற்படுத்துவதில் அரசு மற்றும் தனியார் துறை ஒருங்கிணைந்து செயல்படுவது அவசியம் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் கூறியுள்ளார். சென்னை கிண்டியில் தனியார் மருத்துவமனை சார்பில் நேற்று மாலை நடைபெற்ற கல்லீரல் மற்றும் மாற்று அறுவை சிகிச்சை உச்சி மாநாட்டில் அவர் பங்கேற்று பேசினார். முன்னதாக, சென்னை பள்ளிக்கரணையில் உள்ள தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு சென்ற அவர், நிறுவனத்தில் உள்நாட்டிலேயே கட்டமைக்கப்பட்ட ஆழ்கடல் சோதனை மையத்தை பார்வையிட்டார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், ஆழ்கடல் சோதனை மையத்தின் மூலம் நாட்டின்

ஆழ்கடல் குறித்த பல்வேறு ஆராய்ச்சிகளுக்கு தனியார் துறை மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கும் இது மிகப் பெரிய உதவியாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

*மன்சுக் மாண்டவியா* (17)

வளர்ந்த இந்தியாவை கட்டி எழுப்ப டாக்டர் பீமாராவ் அம்பேத்கரின் சமத்துவம், நீதி மற்றும் சகோதரத்துவம் குறித்த தொலைநோக்கு பார்வையில் இருந்து உத்வேகத்தை பெறுமாறு மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார். பாட்னாவில் இன்று இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஜெய் பீம் யாத்திரையை கொடியசைத்து தொடங்கி வைத்து பேசிய அவர், நாட்டின் இளைஞர்கள் அரசியல் அமைப்பின் உணர்வை மதித்து அதனை கடைபிடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். லால் குய்லா கோட்டையின் கொத்தளத்தில் இருந்து பிரதமர் திரு நரேந்திர மோடி பரிந்துரைத்த பஞ்ச் பிராணை இளைஞர்கள் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். நாட்டில் 1 லட்சம் புதிய இளம் தலைவர்களை உருவாக்க வேண்டும் என்ற தொலைநோக்கு பார்வை பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

டாக்டர் அம்பேத்கரின் பிறந்த நாள் மற்றும் இந்திய அரசியலமைப்பின் 75 ஆவது ஆண்டு விழாவை கொண்டாடும் வகையில் இந்த ஜெய் பீம் பாதயாத்திரை ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

குறுத்தோலை ஞாயிறு (11)

இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு, உயிரிழந்த காலத்தை கிறிஸ்துவர்கள் தவக்காலமாக கடைபிடித்து வருகின்றனர். இந்த காலத்தில் ஒவ்வொரு ஆண்டும் 40 நாட்கள் கிறிஸ்துவர்கள் உபவாசம் இருப்பது வழக்கம். அதன்படி, இவ்வாண்டு கடந்த மார்ச் 2 ஆம் தேதி சாம்பல் புதனுடன் தவக்காலம் தொடங்கியது. ஒவ்வொரு ஆண்டும் ஈஸ்டர் பண்டிகைக்கு முந்தைய ஞாயிற்று கிழமை குறுத்தோலை ஞாயிறு கடைபிடிக்கப்படுகிறது. அதன்படி, இன்று புதுச்சேரி ரயில் நிலையம் அருகில் உள்ள புனித இருதய ஆண்டவர் பசிலிக்கா, ஜென்மராகினி மாதா பேராலயம், விண்ணேற்பு அன்னை தேவாலயம், வில்லியனூர் லூர்துமாதா பேராயலங்களில் குறுத்தோலை ஞாயிறு கடைபிடிக்கப்பட்டது, இதனை ஒட்டி தேவாலயங்களில் சிறப்பு பிராத்தனை நடைபெற்றது.

பத்ம விருது(6)

அடுத்த ஆண்டிற்கான பத்ம விருதுகளுக்கு மத்திய அரசு விண்ணப்பங்களை வரவேற்றுள்ள நிலையில், விண்ணப்பங்களை அனுப்புவது மற்றும் பரிந்துரைப்பதற்கு வரும் ஜூலை மாதம் 31 ஆம் தேதி கடைசி நாளாகும். பத்ம விருதுகளுக்கான விண்ணப்பங்களை பரிந்துரை செய்யும் நடைமுறை கடந்த மாதம் 13 ஆம் தேதி தொடங்கியது. பத்ம விருதுகள் அடுத்த ஆண்டு குடியரசு தினத்தன்று, அறிவிக்கப்படும்.

*மசோதா* (13)

உச்சநீதிமன்ற தீர்ப்பை அடுத்து தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட 10 மசோதாக்களும் சட்டமானதாக தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கப் பட்டுள்ளது. ஆளுநரால் ஒப்புதல் அளிக்காமல் நிறுத்தி வைக்கப்பட்ட 10 மசோதாக்களும் தமிழக அரசு கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் தேதி சட்டப்பேரவையில் மீண்டும் நிறைவேற்றி ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைத்தது. அதனை நவம்பர் மாதம் 28 ஆம் தேதி குடியரசு தலைவரின் ஒப்புதலுக்காக ஆளுநர் அனுப்பி வைத்தார். இந்நிலையில், நிலுவையில் உள்ள மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்கும் விவகாரத்தில் ஆளுநருக்கு உத்தரவிடக் கோரி தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தது. இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் நிறுத்தி வைத்தது

சட்ட விரோதம் என்று தீர்ப்பளித்தது. இதனையடுத்து ஆளுநர் ஒப்புதல் அளிக்க மறுத்த 10 மசோதாக்களும் சட்டமானதாக தமிழக அரசு அரசிதழில் அறிவித்துள்ளது.

விளையாட்டு (6)

உலகக் கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியாவின் ஜோதி சுரேகா-ரிஷப் யாதவ் இணை தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளது. அமெரிக்காவின் புளோரிடா மாவட்டத்தில் நடைபெற்ற கலப்பு இரட்டையர் பிரிவின் இறுதிப் போடடியில் இந்திய வீரர்கள், சீன இணை வீரர்களை 153 க்கு 151 என்ற புள்ளி கணக்கில் வென்று முதல் முறையாக தங்கப் பதக்கம் பெற்று சாதனை படைத்துள்ளனர்.